
सत्यमेव जयते
Government of India

निष्पक्ष खेल
Play fair

NATIONAL ANTI DOPING AGENCY INDIA

சிகிச்சை பயன்பாட்டு விலக்கு செயல்முறை



சிகிச்சை பயன்பாட்டு விலக்கு என்றால் என்ன (TUE)?

மருந்துகள் உட்கொள்ள வேண்டிய அல்லது அறுவை சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய நோய்களோ அல்லது சூழ்நிலைகளோ தடகள வீரர்களுக்கு இருக்கலாம். ஒரு நோய் அல்லது சூழ்நிலைக்கு சிகிச்சையளிப்பதற்கு பயன்படுத்த வேண்டிய அந்த மருந்துகளோ அல்லது சிகிச்சை முறையோ உலக ஊக்கமருந்து எதிர்ப்பு ஆணையத்தின் (WADA) **தடைசெய்யப்பட்ட பட்டியலின்படி** தடைசெய்யப்பட்டிருந்தால், ஊக்கமருந்து எதிர்ப்பு விதிமீறல் (ADRV) மற்றும் பொருந்தக்கூடிய தடை எதுவுமின்றி, அந்தப் பொருள் அல்லது முறையைப் போட்டியின்போது பயன்படுத்துவதற்கு, ஒரு TUE அந்த தடகள வீரருக்கு அதிகாரம் அளிக்கலாம். TUE-க்களுக்கான விண்ணப்பங்கள் TUC குழுவின் (TUEC) மருத்துவ ஆய்வுக்குழுவால் மதிப்பீடு செய்யப்படுகிறது.

தேசிய அளவிலான போட்டிகளுக்கும், போட்டிக்கு வெளியேயான சோதனைக்கும், NADO TUE-க்கள் மட்டுமே செல்லுபடியாகும்.




ஒரு TUE வழங்குவதற்கான அளவுகோல்கள் என்ன?

பின்வரும் நான்கு அளவுகோல்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் (மேலும் விவரங்களுக்கு, சிகிச்சைப் பயன்பாட்டு விலக்குக்கான (ISTUE) WADA சர்வதேச தரநிலைகளின் பிரிவுக்கூறு 4.2)ஐப் பார்க்கவும்:

தடைசெய்யப்பட்ட பொருள் அல்லது முறையைப் பயன்படுத்தி சிகிச்சை தேவைப்படுகிற ஒரு தெளிவான மருத்துவ நிலை தடகள வீரருக்கு உள்ளது;



அந்தப் பொருளின் சிகிச்சைப் பயன்பாடு, நிகழ்தகவுகளின் சமநிலையின்படி, தடகள வீரரின் இயல்பான ஆரோக்கிய நிலையைத் தாண்டி அவரது செயல்திறனை கணிசமாக மேம்படுத்தாது



தடை செய்யப்பட்ட பொருள் அல்லது முறை அந்த மருத்துவ நிலைக்கென குறிப்பிடப்பட்ட ஒரு சிகிச்சையாகும் மற்றும் நியாயமான அனுமதிக்கப்பட்ட சிகிச்சை எதுவும் இல்லை;



அந்தப் பொருள் அல்லது முறையைப் பயன்படுத்துவதற்கான அவசியம், பயன்படுத்தும்போது தடைசெய்யப்பட்ட ஒரு பொருள் அல்லது முறையின் முந்தைய பயன்பாட்டின் (**TUE** இல்லாமல்) விளைவானது அல்ல



ஒரு TUE-க்கு யார் விண்ணப்பிக்க வேண்டும்?

எங்கு, எப்போது விண்ணப்பிக்க வேண்டும்?

ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகளுக்குட்படுத்தப்படுகிற தடகள வீரர்கள், ஒரு தடைசெய்யப்பட்ட பொருளை எடுத்துக்கொள்வதற்கு அல்லது ஒரு தடைசெய்யப்பட்ட முறையை பயன்படுத்துவதற்கு TUE தேவைப்படும். நீங்கள் யாரிடம் விண்ணப்பிக்க வேண்டும் மற்றும் முன்தேதியிட்டு செயல்படுகிறவாறு விண்ணப்பிக்கலாமா என்று அறிவதற்கு, NADA இந்தியாவிடம் நீங்கள் சரிபார்க்க வேண்டும்.

முதலில், நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய மருந்து அல்லது பயன்படுத்த வேண்டிய முறையானது, WADA தடை செய்யப்பட்ட பட்டியலின்படி தடைசெய்யப்பட்டுள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

[தடைசெய்யப்பட்ட பட்டியல்].

நீங்கள், ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகளுக்கு கட்டுப்பட வேண்டிய ஒரு தடகள வீரர் என்று மருத்துவரு(ர்களு)க்கு தெரிவிக்க வேண்டியது உங்கள் பொறுப்பாகும். உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பொருள் / முறை எதுவானாலும், நீங்களும், உங்கள் மருத்துவரும் தடைசெய்யப்பட்ட பட்டியலை சரிபார்க்க வேண்டும். அந்தப் பொருளோ / முறையோ தடைசெய்யப்பட்டிருந்தால், தடைசெய்யப்படாத மாற்று குறித்து ஆலோசிக்கவும், அவ்வாறு எதுவும் இல்லையெனில், TUE-க்கு விண்ணப்பிக்கவும். தடகள வீரருக்கே இறுதிப் பொறுப்பு உள்ளது என்பதை நினைவில் கொள்ளவும். உங்களுக்கு சிரமங்கள் இருப்பின் NADA இந்தியாவை தொடர்பு கொள்ளவும்.

உங்கள் போட்டி நிலை மற்றும் TUE விண்ணப்பத் தேவைளை தீர்மானிப்பதற்கு NADA இந்தியாவை தொடர்பு கொள்ளவும்.



நீங்கள் ஒரு தேசிய அளவிலான தடகள வீரர் என்று தீர்மானிக்கப்பட்டால், அதாவது, தேசிய அளவிலான தடகள வீரர்களாகக் கருதப்படுகிற பின்வரும் தடகள வீரர்கள்:

- இந்தியாவில் உள்ள எந்தவொரு தேசிய கூட்டமைப்பு, அல்லது இந்தியாவில் உள்ள எந்தவொரு தேசிய கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினர் அல்லது இணை நிறுவனத்தின் (எந்தவொரு கிளப், அணிகள், சங்கங்கள் அல்லது லீக் உட்பட) உறுப்பினர்களாகவோ அல்லது உரிமம் உடையவர்களாகவோ உள்ள தடகள வீரர்கள்;

- நடத்தப்படுகிறபோது, இந்தியாவில் உள்ள எந்தவொரு தேசிய கூட்டமைப்பு அல்லது இந்தியாவில் உள்ள எந்தவொரு தேசிய கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினர் அல்லது இணை நிறுவனம் (எந்தவொரு கிளப், அணிகள், சங்கங்கள் அல்லது லீக் உட்பட) அல்லது இந்திய அரசால் ஏற்பாடு செய்யப்படுகிற, அங்கீகரிக்கப்படுகிற அல்லது வழங்கப்படுகிற நிகழ்ச்சிகள், போட்டிகள் மற்றும் பிற செயல்பாடுகளில் பங்கேற்கிற அல்லது போட்டியிடுகிற தடகள வீரர்கள்;

- ஊக்கமருந்து எதிர்ப்பு நோக்கங்களுக்காக, ஒரு சான்றளிப்பு, ஒரு உரிமம் அல்லது வேறுபிற ஒப்பந்த ஏற்பாடுகளின் காரணமாக, இந்தியாவில் உள்ள எந்தவொரு தேசிய கூட்டமைப்பு, இந்தியாவில் உள்ள எந்தவொரு தேசிய கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினர் அல்லது இணை நிறுவனத்தின் (எந்தவொரு கிளப், அணிகள், சங்கங்கள் அல்லது லீக் உட்பட) சட்ட உரிமைக்குள் வருகிற தடகள வீரர்கள்; மற்றும்

- பிறவாறாக ஒரு தேசிய கூட்டமைப்புடன் இணைக்கப்படாத ஒரு தேசிய நிகழ்ச்சி அல்லது வேறு பிற தேசிய லீக் ஏற்பாட்டாளரால் ஏற்பாடு செய்யப்படுகிற, அங்கீகரிக்கப்படுகிற அல்லது வழங்கப்படுகிற எந்தவொரு செயல்பாட்டிலும் பங்கேற்கிற தடகள வீரர்கள்.

இருப்பினும், அத்தகைய எந்தவொரு தடகள வீரரும், அவர்கள் சம்பந்தப்பட்ட சர்வதேச கூட்டமைப்புகளால் சர்வதேச அளவு தடகள வீரர்கள் என்று வகைப்படுத்தப்பட்டால், பின்பு அவர்கள் சர்வதேச அளவு தடகள வீரர்கள் என்று (தேசிய அளவு தடகள வீரர்கள் என்றல்லாமல்) கருதப்பட வேண்டும்.

அனைத்து தேசிய அளவு தடகள வீரர்களும், அவசரநிலை அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகள் இல்லாதவரையில், தேவை எழுந்தவுடன் விரைவில், முன்கூட்டியே NADA இந்தியாவிடம் விண்ணப்பிக்க வேண்டும்.

போட்டிகளில் மட்டும் தடைசெய்யப்பட்ட பொருட்களுக்கு, உங்கள் அடுத்த போட்டிக்கு குறைந்தது 30 நாட்கள் முன்பு நீங்கள் TUE-க்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கீழேயுள்ள “TUE-க்கு NADA இந்தியாவிடம் எவ்வாறு விண்ணப்பிப்பது?” என்கிற பிரிவைப் பார்க்கவும்.

உங்கள் நிலை, மேலே வரையறுக்கப்பட்டவாறு “தேசிய-அளவை” விடக் குறைவானது எனில், NADA இந்தியாவால் சோதிக்கப்பட்ட பிறகு, முன்தேதியிட்டு செயல்படுகிற TUE-க்கு விண்ணப்பிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.



முக்கிய குறிப்பு:

NADA இந்தியாவால் வழங்கப்படும் TUE தேசிய அளவில் மட்டுமே செல்லுபடியாகும். நீங்கள் ஒரு சர்வதேச அளவிலான தடகள வீரராக இருந்தாலோ அல்லது அவ்வாறு விளங்கினாலோ, அல்லது பெரிய விளையாட்டுகளில் போட்டியிட்டாலோ, அது தொடர்புடைய சர்வதேச கூட்டமைப்பு (IF) அல்லது பெரிய நிகழ்ச்சி அமைப்புகளால் (MEO) அங்கீகரிக்கப்படாதவரையில், அந்த TUE செல்லுபடியாகாது. உங்கள் NADA இந்தியாவின் TUE அத்தகைய IF அல்லது MEO-வால் தாமாகவே அங்கீகரிக்கப்படுகிறதா என்பதை சரிபார்க்க வேண்டியது உங்கள் பொறுப்பாகும்.

உங்கள் நிலை மற்றும் TUE விண்ணப்பத் தேவைகளைத் தீர்மானிப்பதில் NADA இந்தியா உங்களுக்கு உதவ முடியும், மற்றும், தேவை ஏற்படின், உங்கள் NADA இந்தியாவின் TUE-வை ஒரு IF அல்லது MEO-ன் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதில் உதவ முடியும். தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம், அறை 103-104, முதல் தளம், JLN மைதான வளாகம், வாயில் எண். 10, புதுடில்லி-110003, தொலைபேசி: 011- 24368274, மின்னஞ்சல்: **info.nada@nic.in**.

ஒரு முன்தேதியிட்டு செயல்படுகிற **TUE**-வை நான் பெறமுடியுமா?

பின்வரும் சூழ்நிலைகளில் மட்டுமே, நீங்கள் **TUE**-க்காக **NADA** இந்தியாவிற்கு முன்தேதியிட்டு விண்ணப்பிக்கலாம்:

1. ஒரு மருத்துவ நிலையின் அவசரகால அல்லது அவசரசிகிச்சை உங்களுக்கு தேவைப்பட்டது.

2. போதுமான நேரம் இல்லை. இதற்கு முன்பு, சோதனை செய்துகொள்வதற்கு முன்பு, TUE விண்ணப்பம் சமர்ப்பித்தல் அல்லது அதனை மதிப்பீடு செய்வதிலிருந்து உங்களை தடுக்கக்கூடிய வாய்ப்பு அல்லது பிற விதிவிலக்கான சூழ்நிலைகளில் இருந்தன.

3. எங்கள் ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகளின்படி (NADA ADR 2021), TUE-க்காக முன்கூட்டியே விண்ணப்பிப்பதற்கு நீங்கள் அனுமதிக்கப்படவில்லை அல்லது தேவைப்படவில்லை.

4. நீங்கள், ஒரு சர்வதேச கூட்டமைப்பு அல்லது தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனத்தின் அதிகார வரம்புக்குள் வராத ஒரு கீழ்நிலை தடகள வீரர் மற்றும் சோதிக்கப்பட்டீர்கள்.

5. போட்டியில் மட்டுமே தடை செய்யப்பட்ட ஒரு பொருளை (எ.கா. குளுகோகார்ட்டிகாய்டுகள்) போட்டிக்கு வெளியே பயன்படுத்தியதற்குப் பிறகு நீங்கள் நேர்மறையாக சோதிக்கப்பட்டீர்கள்.

அரிதான மற்றும் விதிவிலக்கான சூழ்நிலைகளிலும், ISTUE-ல் வேறு எந்த விதிமுறைகளும் இருந்தபோதிலும், குறியீட்டின் நோக்கத்தை பரிசீலிக்கும்போது, முன்தேதியிட்டு TUE வழங்காதது வெளிப்படையாக நியாயமற்றது எனில், ஒரு தடைசெய்யப்பட்ட பொருள் அல்லது முறையை சிகிச்சையில் பயன்படுத்துவதற்கு முன்தேதியிட்டு ஒப்புதல் அளிக்குமாறு நீங்கள் விண்ணப்பிக்கலாம் மற்றும் வழங்கப்படலாம்.


இந்த தனித்துவமான முன்தேதியிட்ட WADA-இன் முன் ஒப்புதலுடன் மட்டுமே வழங்கப்படும் (மற்றும் NADA இந்தியாவின் முடிவை, WADA அதன் சொந்த விருப்புரிமையின்பேரில் ஒப்புக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.).



முக்கிய குறிப்பு:

TUE இல்லாமல், தடை செய்யப்பட்ட பொருள் அல்லது முறையைப் பயன்படுத்துதல் ஊக்கமருந்து எதிர்ப்பு விதிமீறலுக்கு வழிவகுக்கும்.

மாதிரி சேகரிப்பைத் தொடர்ந்து, முன்தேதியிட்ட TUE-க்கான விண்ணப்பம் தேவையெனில், ஒரு மருத்துவக் கோப்பை தயார் செய்து, மதிப்பீட்டிற்கு சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்திருக்குமாறு உங்களுக்கு கடுமையாக அறிவுறுத்தப்படுகிறது.



ஒரு TUE-க்காக NADA இந்தியாவுக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?

தேவைப்படுகிற மருத்துவ கோப்புடன், ADAMS வழியாக, TUE விண்ணப்பங்களை சமர்ப்பிக்க NADA இந்தியா ஊக்கமளிக்கிறது. இதுவரை ஒரு ADAMS கணக்கு உங்களிடம் இல்லையெனில், அதனை அமைப்பதற்கு, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம், அறை 103-104, முதல் தளம், JLN மைதான வளாகம், வாயில் எண். 10, புதுடில்லி-110003, தொலைபேசி: 011- 24368274, மின்னஞ்சல்: ***info.nada@nic.in***.

இல்லையெனில், NADA இந்தியாவின் TUE விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து, அதனைப் பூர்த்திசெய்து கையொப்பமிட்டவுடன், தேவைப்படுகிற மருத்துவக் கோப்புடன் சேர்த்து, அதனை அனுப்ப வேண்டிய முகவரி: தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம், அறை 103-104, முதல் தளம், JLN மைதான வளாகம், வாயில் எண். 10, புதுடில்லி-110003, தொலைபேசி: 011- 24368274, மின்னஞ்சல்: ***tue-nadaindia@gov.in***.

உங்கள் TUE விண்ணப்பம் பெரிய எழுத்துக்களை பயன்படுத்தி படிக்கக்கூடிய வடிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மருத்துவக் கோப்பில் பின்வருவன அடங்கும். அதாவது:

ஒரு விரிவான மருத்துவ வரலாறு, அசல் நோயறிதல் மருத்துவரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்கள் உட்பட (முடிந்தால்)

விண்ணப்பம் தொடர்பான அனைத்து பரிசோதனைகள், ஆய்வக விசாரணைகள் மற்றும் படிமமாக்க ஆய்வுகளின் முடிவுகள்.



முழுமைபெறாத அல்லது படிக்கமுடியாத எந்தவொரு TUE விண்ணப்பமும் பரிசீலிக்கப்படாது மற்றும் அதனை நிறைவு செய்து மீண்டும் சமர்ப்பிப்பதற்காக திருப்பி அனுப்பப்படும். சரியான மருத்துவ ஆவணங்களை வழங்குவதில் உங்களுக்கும், உங்கள் மருத்துவருக்கும் உதவி செய்வதற்கு, TUE விண்ணப்ப செயல்முறைகளின்போது வழிகாட்டுவதற்கும், உதவி செய்வதற்குமான WADA-வின் **TUE விண்ணப்பங்களுக்கான சரிபார்ப்புப் பட்டியல்களை** பார்க்குமாறும், குறிப்பிட்ட பொதுவான மருத்துவ நிலைமைகள், சிகிச்சைகள், பொருட்கள், முதலியவற்றிற்கு **TUEC-க்களின் முடிவுகளுக்கு உதவி செய்வதற்கான மருத்துவ தகவல்களைப்** பார்க்குமாறும் நாங்கள் உங்களுக்கு ஆலோசனை அளிக்கிறோம்,

TUE விண்ணப்பப் படிவம் மற்றும் உங்கள் விண்ணப்பத்திற்கு ஆதரவாக சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து மருத்துவத் தகவல்கள், மற்றும் அது அனுப்பப்பட்டதற்கான சான்றின் ஒரு முழுமையான நகலை வைத்திருக்கவும்.

TUE செயல்பாட்டு நடைமுறை என்றால் என்ன?



மருத்துவ பரிசோதனையாளர்

▲

விளையாட்டு வீரர்/வீராங்கனை தமது மருத்துவ பரிசோதனையாளரை சந்திக்கிறார். மருத்துவ பரிசோதனை ஆய்வின் முடிவில், தடை செய்யப்பட்ட ஒரு பொருள் அல்லது வழிமுறை பயன்படுத்தபட வேண்டிய சூழல் அவருக்கு இருப்பது கண்டறியப்படுகிறது.

▼

விளையாட்டு வீரர்

TUEற்காக விண்ணப்பிக்கவும்

ADO TUE மேலாளர்/ நிர்வகிப்பாளர்

ADO TUECற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை சமர்பிக்கவும்




TUEC

முடிவு எடுத்து வெளியிடுவதற்கு 21 நாட்கள் ஆகும்

TUEC மேற்கொண்ட முடிவை விளையாட்டு வீரருக்கு தெரியப்படுத்தி ADAMSல் பதிவு செய்யவும்

பெரிய நிகழ்ச்சிகளில் என்ன நடக்கிறது?



தடகள வீரர்கள், ஒரு நிகழ்ச்சி தொடர்பாக ஒரு தடைசெய்யப்பட்ட பொருள் அல்லது முறையைப் பயன்படுத்த விரும்பினால், அவர்களது TUE-இன் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று பெரிய நிகழ்ச்சி அமைப்பு (MEO) கேட்டுக் கொள்கிறது.

NADA இந்தியாவால் வழங்கப்பட்ட TUE உங்களிடம் இருந்து, நீங்கள் ஒரு பெரிய நிகழ்ச்சியில் எ.கா. ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்வீர்கள் என்றால், அவர்களது அங்கீகார செயல்முறை குறித்த தகவல்களுக்கு MEO-வை நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும்.

என்னுடைய TUE விண்ணப்பம்

[அல்லது அங்கீகாரத்திற்கான கோரிக்கை] மீதான முடிவை நான் எப்போது பெறுவேன்?

NADA இந்தியாவின் TUEC-க்கள், கூடிய விரைவில், மற்றும் வழக்கமாக, தேவைப்படுகிற மருத்துவத் தகவல்கள் உட்பட முழுமையான TUE விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து 21 நாட்களுக்குள், முடிவெடுக்க வேண்டும்.

என்னுடைய TUE-வை புதுப்பிக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?

ஒவ்வொரு TUE-க்கும் ஒரு குறிப்பிட்ட காலஅளவு உள்ளது, அதன் முடிவில் அது தாமாகவே காலாவதியாகிறது. தடைசெய்யப்பட்ட பொருள் அல்லது முறையை நீங்கள் தொடர வேண்டுமெனில், தற்போதுள்ள TUE காலாவதியாவதற்கு முன்பே ஒரு முடிவு எடுப்பதற்கு போதுமான காலம் இருப்பதற்கேதுவாக, காலாவதி தேதிக்கு முன்பே, புதுப்பிக்கப்பட்ட மருத்துவத் தகவல்களுடன், TUE-க்கான ஒரு புதிய விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பது உங்கள் பொறுப்பாகும்.

முக்கிய குறிப்பு:

தடைசெய்யப்பட்ட பொருள் அல்லது முறையின் இருப்பு (மாதிரி சேகரிப்பை பின்பற்றுதல்), பயன்பாடு, வைத்திருத்தல் அல்லது நிருவகித்தல் என்பது உங்கள் TUE-ன் விதிமுறைகளுடன் ஒத்துப்போக வேண்டும். எனவே, குறிப்பிடத்தக்க அளவிலான மாறுபட்ட மருந்தளவு, எண்ணிக்கை, வழித்தடம் அல்லது போட்டுக்கொள்கிற காலஅளவு தேவைப்படின், நீங்கள் ஒரு புதிய TUE-க்கு விண்ணப்பிக்க வேண்டியிருக்கும் என்பதால் நீங்கள் NADA இந்தியாவை தொடர்பு கொள்ள வேண்டும். சில பொருட்களும், மருந்தளவுகளும் எ.கா. இன்சுலின், சிகிச்சையின்போது அடிக்கடி மாற்றப்படுகின்றன மற்றும் இந்த சாத்தியமான ஏற்ற இறக்கங்கள் சிகிச்சையளிக்கும் மருத்துவரால் TUE விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் அது வழக்கமாக ADO TUEC-ஆல் ஏற்றுக்கொள்ளப்படும்.

என்னுடைய NADA இந்தியாவின் TUE விண்ணப்பம் மறுக்கப்பட்டால் என்ன செய்வது?

ஒரு TUE விண்ணப்பத்தினை மறுப்பதற்கான முடிவில், அந்த மறுப்பிற்கான காரணங்களின் எழுத்துப்பூர்வமான விளக்கமும் அடங்கும். அது உங்களுக்கு தெளிவாக இல்லையெனில், ஏன் TUE மறுக்கப்பட்டது என்பதை சரியாகப் புரிந்துகொள்வதற்கு NADA இந்தியாவை தொடர்பு கொள்ளவும். சில நேரங்களில், முக்கியமான தகவல், நோயறிதல் சோதனை, ஆய்வக முடிவுகள் தவறிப்போகலாம். அவ்வாறான நேர்வில், நீங்கள் எங்களிடம் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். இல்லையெனில், மறுப்பு முடிவுக்கெதிராக பின்வருமாறு நீங்கள் மேல்முறையீடு செய்யலாம்:

TUE விண்ணப்பத்தின் மறுப்பைப் பொறுத்தவரையில், தேசிய அளவு தடகள வீரர் 21 நாட்களுக்குள், தலைவர், ஊக்கமருந்து எதிர்ப்பு மேல்முறையீட்டுக் குழு, நுழைவாயில் எண்.10, மாடிப்படி எண்.2, முதல் தளம், அறை எண்.103-104, விளையாட்டு நூலகத்திற்கு மேல், JLN மைதான வளாகம், புதுடில்லி - 110 003-க்கு விண்ணப்பிக்கலாம்.

என்னுடைய NADA இந்தியாவின் TUE, என்னுடைய சர்வதேச கூட்டமைப்பால் அங்கீகரிக்கப்படவில்லை என்றால் என்ன செய்வது?

அங்கீகரிக்கப்படவில்லை என்ற அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்பு, அதனை மறுஆய்வு செய்யும்பொருட்டு, WADA-க்கு அந்த விஷயத்தினை கொண்டு செல்வதற்கு உங்களுக்கும் NADA இந்தியாவிற்கும் 21 நாட்கள் கால அவகாசம் உள்ளது. நீங்கள் NADA இந்தியாவுக்கு சமர்ப்பித்த மற்றும் எதன் அடிப்படையில் அவர்களது TUEC முடிவெடுத்ததோ, அதே தகவல்களை, ஒரு பாதுகாப்பான இணையவழி முறையில் அல்லது பதிவஞ்சலில், பின்வரும் முகவரிக்கு நீங்கள் அனுப்ப வேண்டும்:

WADA மருத்துவத்துறை உலக ஊக்கமருந்து எதிர்ப்பு ஆணையம் பங்குச்சந்தை கோபுரம் 800 ப்ளேஸ் விக்டோரியா (சூட் 1700) அஞ்சல் பெட்டி எண்.120 மான்ட்ரீல் (க்யூபெக்) H4Z 1B7 கனடா

விசாரிப்பதற்கு மற்றும் / அல்லது மறுஆய்வுக்கான கோரிக்கை அனுப்புவதற்கான மின்னஞ்சல் முகவரி:
medical@wada-ama.org

WADA-வின் முடிவு நிலுவையில் உள்ளபோது, NADA இந்தியாவின் TUE, தேசிய அளவிலான போட்டி மற்றும் போட்டிக்கு வெளியேயான சோதனைக்கு மட்டும் செல்லுபடியாகக்கூடியதாக இருக்கும். அந்த விஷயம் மறுஆய்வுக்காக WADA-வுக்கு அனுப்பப்படவில்லை எனில், வழங்கப்பட்ட அசல் TUE, தேசிய அளவிலான போட்டி மற்றும் போட்டிக்கு வெளியேயான சோதனைக்கு செல்லுபடியாகக்கூடியதாக இருக்குமா என்பதை NADA இந்தியா தீர்மானிக்க வேண்டும்.



என்னுடைய மருத்துவ தகவல்கள் இரகசியமான முறையில் கையாளப்படுமா?

ஆதரவு மருத்துவத் தகவல்கள், மற்றும் உங்கள் TUE கோரிக்கையினை மதிப்பீடு செய்வது தொடர்பான வேறு எந்த தகவல்களும் உட்பட, TUE விண்ணப்பத்தில் உள்ள அனைத்து தகவல்களும் கண்டிப்பாக இரகசியமாக வைத்திருக்கப்படுகிறது மற்றும் TUE செயல்முறை மற்றும் NADA இந்தியாவின் **TUE விண்ணப்பப் படிவத்தில்** உள்ள தடகள வீரரின் அறிவிப்பின்படி கையாளப்படுகிறது. TUEC-இன் அனைத்து உறுப்பினர்களும் மற்றும் உங்கள் TUC கோரிக்கை மற்றும் அது தொடர்பான தகவல்களின் (தடகள வீரரின் அறிவிப்பில் வரையறுக்கப்பட்டவாறு) வேறு பிற அதிகாரமளிக்கப்பட்ட பெறுநர்களும், ஒரு தொழில்முறை அல்லது ஒப்பந்த இரகசியத்தன்மை கடமைக்கு உட்பட்டவர்களாவர்.

தடகள வீரரின் அறிவிப்புக்கான விதிமுறைகளை தயவுசெய்து கவனமாக மறுஆய்வு செய்யவும். குறிப்பாக, தடகள வீரரின் அறிவிப்பின்படி உங்கள் TUE கோரிக்கை தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான NADA இந்தியாவின் TUEC-இன் உரிமையை நீங்கள் திரும்பப்பெற விரும்பினால், ஒப்புதல் வழங்காமல் உங்கள் TUE விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

உங்கள் TUE கோரிக்கை தொடர்பான தகவல்கள், தனியுரிமை மற்றும் தனிநபர் தகவல்களின் பாதுகாப்புக்கான சர்வதேச தரநிலையின்படி, தடகள வீரரின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக தேவைப்படுகிறவரை, NADA இந்தியா மற்றும் வேறு பிற அதிகாரமளிக்கப்பட்ட பெறுநர்களால் தக்க வைக்கப்படும்.



தொடர்பு தகவல்



NADA இந்தியாவின் தனிநபர் தகவல் நடைமுறைகள் தொடர்பான எந்தவொரு கூடுதல் தகவல்கள் மற்றும் கேள்விகளுக்கும், தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம், அறை 103-104, முதல் தளம், JLN மைதான வளாகம், வாயில் எண். 10, புதுடில்லி-110003, தொலைபேசி: 011-24368274, மின்னஞ்சல்: ***data-pvyofficer-nada@nic.in*** என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

ஒரு TUE-க்கு எந்த நிறுவனத்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும் என்பது தொடர்பாக அல்லது அங்கீகார செயல்முறை குறித்து உங்களுக்கு சந்தேகம் ஏதும் இருந்தால் அல்லது TUE-க்கள் தொடர்பாக வேறு ஏதேனும் கேள்விகள் இருந்தால், தயவு செய்து தொடர்பு கொள்ளவும்: தேசிய ஊக்கமருந்து எதிர்ப்பு நிறுவனம், அறை 103-104, முதல் தளம், JLN மைதான வளாகம், வாயில் எண். 10, புதுடில்லி-110003, தொலைபேசி: 011-24368274, மின்னஞ்சல்: ***tue-nadaindia@gov.in***

மற்ற பயனுள்ள இணைப்புகள்



NADA ஊக்கமருந்து எதிர்ப்பு விதிகள் 2021

WADA சிகிச்சை பயன்பாட்டு விலக்குகளுக்கான சர்வதேச தரநிலைகள் (ISTUE)

WADA TUE விண்ணப்பங்களுக்கான சரிபார்ப்புப் பட்டியல்கள்

2021 சிகிச்சை பயன்பாட்டு விலக்குகளின் சர்வதேச தரநிலைகளுக்கான (ISTUE) WADA வழிகாட்டு நெறிமுறைகள்

WADA ஊக்கமருந்து எதிர்ப்பு கல்வி மற்றும் கற்றல் (ADEL)

WADA தனியுரிமை மற்றும் தனிநபர் தகவல்கள் பாதுகாப்பிற்கான சர்வதேச தரநிலை (ISPPPI)

எந்த தடை செய்யப்பட்ட மருந்தும் உங்கள் விளையாட்டு வாழ்வியல் தொழிலை பாதிக்க அனுமதியாதீர்

NADA இந்தியா செயலி வாயிலாக ஒரு மருந்து தடை செய்யப்பட்டு இருக்கிறதா அல்லது அதன் உட்கலவைகள் என்னென்ன என்று எளிதாக தெரிந்து கொண்டு கவனக்குறைவால் ஊக்க மருந்து பயன்படுத்துதலிலிருந்து வீரர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ளலாம்.

உங்கள் மருத்துவ செயலியை தெரிந்து கொள்ளவும்

தரவிறக்கம் செய்ய இங்கே ஸ்கேன் செய்யவும்



குறிப்பு: ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், இந்த நூலின் ஆங்கில பதிவு இறுதியானதாக கருதப்படும்.

सत्यमेव जयते
Government of India

निष्पक्ष खेल
Play fair

NATIONAL ANTI DOPING AGENCY INDIA

Ramp No. 02, Hall No. 103-104, First Floor,
Jawaharlal Nehru Stadium Complex, Lodhi Road, New Delhi – 110003
Phone: +91-11-24368274 | Email: info.nada@nic.in, edu-nadaindia@gov.in

#SAYNO TODOPING | TODAY & EVERYDAY